★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No. QB/8945/78

மலர்: 20 தை 14 ஸபர் 27 இதழ்: 348
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 27-1-79

# பாண்டிச்சேரியில் கலவரம்!

## ஞாயிறுவரை ஊரடங்கு

### 127 பேர் கைது: கார், ஜீப் தீக்கிரை!!

பண்டிச்சேரி, ஜன. 26

பாண்டிச்சேரியில் மத்திய அரசுக்கு எதிராக இன்று இடம் பெற்ற கலவரத்தை அடுத்து ஞாயிற்றுக்கிழமை காலைவரை ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டுள்ளது.

பாண்டிச்சேரியை அண்டை மாநிலத்துடன் இணைக்க வேண்டுமென்ற அரசின்யோசனைக்கு எதிராகவே இன்றுகலவரம் இடம்பெற்றது.

இக்கலவரத்தின்போது அரசு சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டதுடன் 4 கார்களும் 4 அரசாங்க ஜீப்புகளும் தீயிடப்பட்டன.

**15 பொலிசார் காயம்**

முதலில் ஆர்ப்பாட்டம் செய்தகும்பல் ஒன்று பொலிஸ்

[6ம் பக்கம் பார்க்க]

UNIVERSITY OF SRI LANKA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

★ கனடாவிலுள்ள

# பிரெஞ்சு பேசும் மக்களுக்கு

# பிரிந்துசெல்ல அனுமதி!

## அரசு ஆணைக்குழு சிபார்சு!!

[கியூபெக்]

**கனடாவின் ஒரு பெரிய மாகாணமான கியூபெக் தனி ராஜ்யமாகப் பிரிந்து செல்ல விரும்பினுல், அதற்கு அனுமதி வழங்கவேண்டும்' என்று கனடா அரசாங்கத்தினுல் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.**

கனடாவின் மொத்த ஜனத்தொகையில் இரண்டாவது இடத்தை வகிக்கும் கியூபெக் மாகாணம், நிலப்பரப்பில் (5,94,860 சதுர மைல்) முதலிடத்தைப் பெற்றது. இங்கு பிரெஞ்சு மொழிபேசும் மக்கள் வாழ்கின்றுர்கள்.

### கியூபெக் மாகாணம்

கனடாவின் பத்து மாகாணங்களில் கியூபெக் மாகாணமும் ஒன்று. இதன் தலைநகரம் கியூபெக். இங்கு பிரெஞ்சு மொழிபேசும் மக்களே வாழ்கின்றுர்கள். இயற்கை வளங்களை நிறையக்கொண்ட கியூபெக், பரந்த நீண்ட ஆறுகளையும், மலைத்தொடர்களையும், தன்னகத்தே கொண்டது. பண்ணைகளும், விளைநிலங்களும், இயற்கை மூலவளங்களும் இங்கு நிறைய உண்டு. சமஷ்டி ஆட்சி அமைப்பு முறையைக்கொண்ட கனடாவில் கியூபெக் மாகாண அரசைக் கொண்டது. இந்த மாகாண அரசு, சட்டசபையையும், சட்டமேலவையையும் உள்ளடக்கியது.

### ஆணைக்குழு அமைப்பு

பிரெஞ்சு மொழிபேசும் மக்களைக்கொண்ட கியூபெக், ஒரு தனிராஜ்யமாக அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த பல ஆண்டுகளாக எதிரொலித்து வந்ததைத் தொடர்ந்து இதுபற்றி விரிவாக விசாரணைகள் நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க ஒரு ஆணைக்குழுவை கனடா அரசாங்கம் நியமித்தது இந்தஆணைக்குழு கியூபெக் மார்களின் உரிமைக்குரல் குறித்து விரிவாக விசாரணைகள் நடத்தி நேற்று அறிக்கை சமர்ப்பித்தது.

### பிரிந்துசெல்லஅனுமதி

கனடா அரசினுல் நியமிக்கப்பட்ட இந்த ஆணைக்குழு தனது அறிக்கையில், கியூபெக் பிரிந்துசெல்ல விரும்பினுல் கனடா அரசு அதற்கு அனுமதி அளிக்கவேண்டுமென்றும் பிரெஞ்சு மக்களைக் கொண்ட கியூபெக் ஒரு தனிராஜ்யமாக அமைக்கப்படலாமென்றும் சிபார்சு செய்துள்ளது.

### பொதுஜன வாக்கெடுப்பு

பிரிந்து செல்ல அனுமதிக்கப்படும் பட்சத்தில் தனி

[6ம் பக்கம் பார்க்க]

## 500 பேர் பலி!

டாக்கா, ஜன 26

பங்களாதேஷில் நேற்று பிற்பகல் நடைபெற்றரயில் விபத்தொன்றில் 500 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## வானில் வந்த பிரயாணிகளை பொலிசார் தாக்கினராம்

### எம். பி. உடன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கேரதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த வான் ஒன்றில் பிரயாணம் செய்தவர்கள் கச்சேரியடியில்வைத்து பொலிசாரினுல் தாக்கப்பட்டுள்ளனர் என்று புகார் செய்யப்பட்டுள்ளது.

இன்றுமாலை 4 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவம் குறித்து யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரனுக்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடன் சென்று நிலைமையை அவதானித்து வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

இச்சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:

கேரதீவிலிருந்து யாழ்ப்பாணத்திற்குப் பிரயாணிகளை ஏற்றிவந்த தனியார் வானில் அளவுக்கதிகமான பிரயாணிகள் இருந்ததாகவும், யாழ். கச்சேரி எதிரே ஜீப்பில் வந்த பொலிஸார் சிலர், வான் சாரதியையும், பிரயாணிகளை ஏசியவாறு தாக்கியதாகவும்

(6-ம் பக்கம் பார்க்க)

## தடை இருந்தும் ஹிந்தி எதிர்ப்புப் பேரணி நடந்தது

சென்னை, ஜன. 26

சென்னையில் கூட்டங்கள், ஊர்வலங்களுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த போதிலும் தி. மு. க.வும், திராவிடர் கழகமும் ஹிந்தி எதிர்ப்புப் பேரணி ஒன்றை நடாத்தியது.

தி. மு. க. தலைவர் திரு. மு.கருணுநிதி தலைமையிலான ஹிந்தி எதிர்ப்பு ஊர்வலம் சென்னை பெரியார்திடலிருந்து ஆரம்பமாகி அண்ணுசாலை வழியாகத் தேனும்பேட்டை அண்ணு அறிவகத்தைச் சென்றடைந்தது.

தமிழ்நாட்டின் ஏனைய இடங்களில் தி. மு. க., திராவிடர் கழகத் தொண்டர்கள் தத்தம் கட்சி அலுவலங்களில் கறுப்புக்கொடி ஏற்றி, கறுப்புச்சட்டை அணிந்திருந்தனர்.

இப்போராட்டம், மத்திய அரசுக்கோ, மாநில அரசுக்கோ அன்றி, இந்தியக் குடியரசு தினத்திற்கு எதிரானதோ அல்லவென்றும், ஹிந்தியை ஏனைய மொழிபேசும் மக்கள்மீது திணிப்பதற்கு எதிரான நடவடிக்கையே என்றும் திரு. கருணுநிதி இப்போராட்டத்தினர் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார். [இ]

ஒரு வழிப்பாதையில்

## சட்டவிரோத சைக்கிள் சவாரி 26 பேருக்கு அபராதம்

[கொக்குவில்]

ஒருவழிப்பாதையால் சட்டவிரோதமாக சைக்கிளில் சென்ற 26 பேருக்கு தலா 50 ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறைவீதி, மானிப்பாய்வீதி, கஸ்தூரியார்வீதி ஆகியவற்றிலுள்ள ஒருவழிப்பாதை அறிவித்தலுக்கு மாருக சைக்கிளில் சவாரிசெய்த 26 பேரையும் யாழ்.போக்குவரத்துபொலிஸ் பகுதி சப்.இன்ஸ்பெக்டர் திரு.

[6ம் பக்கம் பார்க்க]

## யாழ். நகரில் பெப். 9-ல் ஜி. ஜி. நினைவுதினம்

[யாழ்ப்பாணம்]

அமரர் ஜி.ஜி. பொன்னம்பலத்தின் நினைவுதினத்தை தமிழர் விடுதலைக்கூட்டணி சார்பில் யாழ்ப்பாணத்தில் கொண்டாடுவதற்கு யாழ். எம். பி திரு.வெ. யோகேஸ்வரன் தலைமையிலான குழு சகல ஏற்பாடுகளையும் செய்துவருகிறது.

பெப்ரவரி 9ந் திகதிகாலையில், தமிழர் விடுதலைக்கூட்டணி தலைமைக்காரியாலயத்தில் அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் உருவப்படத்தை எதிர்க்கட்சித்தலைவர் திரு ஏ அமிர்தலிங்கம் திறந்துவைப்பார். கூட்டணிக்காரியாலயத்தில் அன்றுகாலை கஞ்சி வழங்கப்படும்.

அன்று சகல சமய ஆலயங்களிலும் விசேட பூஜைகளுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

வெளிநாடு கூட்டிச் செல்வதாகப் பணம் பெற்றவர்

# கட்டுநாயக்கா ஹோட்டலில் இருவரை தவிக்கவிட்டாராம்

## யாழ். பொலிஸ் மடக்கிப் பிடித்தது

[கொக்குவில்]

வெளிநாட்டில் வேலைபெற்றுத்தருவதாகஆசைவார்த்தை கூறி இரு வாலிபர்களைக் கூட்டிச்சென்று கட்டுநாயகா ஹோட்டலில் தவிக்கவிட்டு தலைமறைவாகினுர் எனக் கூறப்படும் ஓர் இளைப்பாறிய அரசாங்க ஊழியர் யாழ்ப்பாணத்திலுள்ள ஹோட்டல் ஒன்றில்வைத்து கைதுசெய்யப்பட்டார்.

மீசாலை தெற்கைச் சேர்ந்த இ.போ.ச. சாரதி சிவகுரு விசுவநாதன்[37 வயது], உரும்பராய் வடக்கைச்சேர்ந்த லொறிச்சாரதி சுப்பர் சின்னத்தம்பி [35 வயது] ஆகியோர் பொலிஸில் புகார்செய்ததைத் தொடர்ந்தே இந்நபர் கைது செய்யப்பட்டார்.

உரும்பராய் வேம்பன் லேனைச்சேர்ந்த சதாசிவம் பொன்னம்பலம் என்பவரே கைதுசெய்யப்பட்டவராவார்.

யாழ். விசேட புலன்விசார

[6ம் பக்கம் பார்க்க]

## தமிழக முன்னணி இளைஞர் குரல்கொடுக்கிறார்:

# "ஈழத்து இலக்கியங்கள் மீதான இந்திய இறக்குமதித் தடைஅகலவேண்டும்!

## இதற்கு இருநாட்டு எழுத்தாளரும் கூட்டாக இயங்கவேண்டும்!"

"ஈழத்தில் தரமான எழுத்தாளர்கள் விமர்சகர்கள், வாசகர்கள் நிறைய இருக்கின்றார்கள். இலக்கியப் படைப்பாளிகளும் கணிசமாகக் காணப்படுகின்றனர். தரமான இலக்கியங்களும் கூட இங்கு தாராளமாக உண்டு தினசரிப் பத்திரிகைகளும் கூட தமிழகத் தினசரிகளைவிட பல அம்சங்களிலும் தரமாகவே வெளிவருகின்றன. இவற்றையெல்லாம் சுவைக்க தமிழக மக்களுக்கு சந்தர்ப்பம் அளிக்காதது பெரும் தவறாகவே கொள்ளவேண்டும். இதனைத் துரோகம் என்றுகூடச் சொல்லலாம். ஈழத்து இலக்கியங்கள் தமிழகத்திலும் கிடைக்க வழிசெய்யவேண்டும். இதற்கான தடைகள் அகற்றப்பட்டு தற்பொழுது காணப்படும் ஒரு தலைப்பட்சமான நிலைமை மாற்றப்பட்டு, 'இருவழிக் கொள்கை' அமுல்செய்யப்பட வேண்டும்."

இவ்வாறு, அனைத்திந்திய இளைஞர் பெருமன்ற (செங்கல்பட்டு மாவட்டம்) துணைத் தலைவர் திரு. எஸ். இராசகோபால் 'ஈழநாடு'க்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு முதற்தடவையாக விஜயம் செய்துள்ள இவர் நாட்டின் பல பகுதிகளுக்கும் சென்றுவிட்டு நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் வந்தார். ஆர்வமும், துடிப்புமிக்க இந்த இளைஞர் தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:-

"எனது இலங்கை சுற்றுப் பயண நோக்கம்; இங்குள்ள தமிழ் எழுத்தாளர்களை—இலக்கியப் படைப்பாளிகளைச் சந்தித்து கருத்துப் பரிமாறல் செயவதும் பயன்தரும் ஈழத்து இலக்கியங்களை முடிந்தளவு தமிழகம் கொண்டு செல்வதும் தான்.

"இலங்கையின் பல பகுதிகளுக்கும் சென்று பலதரப்பட்ட மக்களையும் நான் சந்தித்தேன். எழுத்தாளர்களுடன் கலந்துரையாடினேன். ஈழத்தின் பாரம்பரிய கலை, கலாச்சாரம் கண்டும், இப் பண்பாடுகளைக் கட்டிவளர்க்க மக்கள் எழுத்தாளர்கள் காட்டிவரும் ஆர்வம் — துடிப்பும் கண்டும், சிருஷ்டி எழுத்தாளர்கள் படைத்திருக்கும்சிறந்த இலக்கியங்கள் கண்டும் நான் உண்மையிலேயே பெருமைப்பட்டேன். இத்தனை தரமான எழுத்தாளர்கள் ஈழத்தில் இருந்தும் இவர்கள் பற்றி தமிழக மக்கள் அறியமுடியாமலிருப்பதும், இலக்கியங்களை படிக்கமுடியாமலிருப்பதும் பெரும் தவறு.

"கட்சிப் பத்திரிகைகள் இங்கு மிக மிகக் குறைவாக உள்ளன. தமிழ் நாட்டில் இவை அதிகம். அங்கு, கட்சி மீது மக்கள் காட்டும் அதி தீவிரம் அல்லது வெறித்தன்மை இங்கு இல்லை. அரசியல் விமர்சனமும் இங்கு குறைவாகவே காணப்படுகிறது மக்கள் மிகவும் பண்பாடுள்ளவர்களாகக் காணப்படுகின்றனர். விருந்தோம்பல் குணமும் இங்கு அதிகம்.

"தமிழகப் பத்திரிகைகள் இங்கு நிறையக் காணப்படுகின்றன. பல குப்பை இலக்கியங்கள் மீது மக்கள் அதிக 'மோகம்' கொண்டுள்ளதை என்னால் காணமுடிந்தது. இந்த 'மயக்க' நிலை தமிழ் நாட்டிலும் உண்டு. அதே நேரத்தில் இங்கு அதிக அளவு சஞ்சிகைகள் இல்லாதது பெருங் குறை. "சிரித்திரன்" சஞ்சிகை உண்மையிலேயே ஒரு சாதனைதான். மனம் விட்டுப் பாராட்டுகிறேன். "மல்லிகை" இலக்கிய ஏடு தமிழ் நாட்டில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் ஆசிரியர் திரு. டொமினிக்

[5ம் பக்கம் பார்க்க]



யாழ்ப்பாண மருத்துவ சங்கம்

மருத்துவ நூல் நிலையத்திற்காக

அளிக்கும்

திருமதி மாலதி சிவகுமார்

அவர்களின்

# பரதநாட்டியம்

28-1-1979 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி

வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

டிக்கட் விபரம்:

றிசேவ்ட்: ரூபா 50/- (2 ஆசனங்கள்)

ரூபா 30/- (1 ஆசனம்)

1-ம் வகுப்பு: ரூபா 20/- - 2-ம் வகுப்பு: ரூபா 10/-

(1287)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல: ஈடு/11401

1. தம்பிப்பிள்ளை குமரவேற்பிள்ளை திருநாவுக்கரசுவும் பெண்
2. கனகலக்ஷ்மி, மல்லாகம்.

- வாதிகள்

- எதிராக

1. சின்னையா வயித்திலிங்கம் யோர்ச்
2. பெண் மேரியோசப்பீன்யோர்ச் 5ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

-பிரதிவாதிகள்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் MB/11401ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1979ம் ஆண்டு மாசிமாதம் 19ம் திகதி திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு [19-2-79] நடத்த நியமித்துள்ளேன்.

### தீர்வைத் தொகை

மேற்குறித்த பிரதிவாதிகள் குறித்த வாதிகளுக்கு ரூபா 11,666/66வும் மேலும் ரூபா 10,000/- வருடமொன்றுக்கு நூற்றுக்கு 10 வீத வட்டிவீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1970ம் ஆண்டு தைமாதம் 23ம் திகதியிலிருந்து, தீர்வைத் திகதியாகிய 1970ம் ஆண்டு ஆவணிமாதம் 5ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்டவட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 603.97 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோவிற்பற்று கரையூர் இறை "கம்மாள சிங்கன் தறை" உறுதிப்படி நிலப்பரப்பு 4 1/4 ஆறல் அளவின் படி நில பர 6 இதில் கிழக்குப் பக்கத்தால் பிரிபட்ட நில பர 3ம் இணறும் மலசலகூடமும் வீடும் மற்றும் அதைச் சேர்ந்தவைகளும் இதற்கு எல்லை கிழக்கு காலஞ்சென்ற பெஞ்சமின் டேவிட்டின் உரிமைக்காரரினுதனம் வடக்கு அந்தோனிப்பிள்ளை கைம்பெண் மதலேனப்பிள்ளையின் உரிமைக்காரரினுதனம் மேற்கு சந்தையா லூயிஸ் பெண் மேரி தெரேசா லூயிசிற்குரிய ஆதனம் தெற்கு காலஞ்சென்ற ஏ. எஸ். லொறன்சின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும் மேரி தெரேசா லூயிசின் மேற்கெல்லைக் காணியின் வடக்கெல்லைக் கூடாக போகும் 6 அடி அகலமுள்ள வண்டில் பாதையுரித்தும் மேற்குப்பக்க றோட்டில் இருந்து போக்குவரவுசெய்யும் உரிமையும் பதிவு இல D 216/208.

சி. செ. பாலசிங்கம்

[கொமிஷனரும் மதிப்பாளரு]

அராலி வடக்கு.
வட்டுக்கோட்டை.
19-01-1979. 1440

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஸ்ரீறியோ அக்காய் மொடல் M8. டேப்றெக்கோடர், SS110 மொடல் ஸ்பீக்கர் பெட்டி இரண்டுடன் விற்பனைக்குண்டு. விபரமறிய நேரில் வரவும். 'பிளிட்ஸ்'றேடியோ, கே. கே. எஸ். றோட், மல்லாகம் சந்தி, மல்லாகம். 1435

புளியம் பொக்கணை குடியேற்றப்பகுதியில் பாடசாலைக்கு அருகாமையில் பத்து ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 1424, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 1424

### வீடு தேவை

சகல வசதிகளும் கொண்ட வீடொன்று யாழ். அரசாங்க அதிபருக்கு மிக அவசரமாக வாடகைக்குத் தேவைப்படுகிறது. குறைந்தது மூன்று அறைகள் உடையதாக, யாழ்ப்பாணம் செயலகத்திலிருந்து ஒரு மைலுக்குள் இருப்பது விரும்பத்தக்கது. இத்தகைய வீடு உடையவர்கள் உடனடியாக அரசாங்க அதிபர், பரிபாலனக்கிளை, செயலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல; 520. 1430

JAFFNA COLLEGE TECHNICAL INSTITUTE

is exploring the possibility of starting the following courses in May 1979.

Those interested are requested to write in: (including those awaiting O/Level results) to: The Director, J. C. T. I., Vaddukoddai.

1. BUILDING CONSTRUCTION
   2 years Technician course Candidates to have O/Level passes in Maths, Physics and English.
2. DRAUGHTMANSHIP
   One-year course in Architectural and Engineering Drawing. Candidates to have passes at O/Level in Maths, Geometrical or Mechanical Drawing and posses knowledge of English.
3. MASONRY
   Six months Craft course Candidates to have passed 7th standard.

1449

### விற்பனைக்கு

EL Morris Minor (Overhead value) சொந்தப்பாவிப்பில் உள்ளது. சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்திற்கு அண்மையில் 'அழகாபுரி' வீட்டில் 28-1-79 ந் திகதி பார்வையிடலாம். க. சண்முகம், 'அளகாபுரி', சண்டிலிப்பாய். 1431

ஈ. வை. மொறிஸ் மைனர் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகொள்ளவும்: ஞானசுரபி, 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 1454

சாவகச்சேரி - சங்கானை பிரதான வீதியில் மட்டுவில் வடக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அருகாமையில் ஐந்து பரப்புடன், கல் வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: முருகன் ஸ்ரோர்ஸ், கண்டி வீதி, கொடிகாமம். 1456

சொந்த வீட்டுப் பாவனையிலுள்ள இங்கிலீஸ் வூல்சிலி பம் விற்பனைக்குண்டு. டாக்டர் இ. சோமசுந்தரம், சென்றல் கிளினிக், நெல்லியடி, கரவெட்டி. 1400

நல்ல நிலைமையிலும், பாவனையிலுமுள்ள சிறுபிள்ளைகளுக்குரிய (16 இஞ்சி) றச் (Rudge) துவிச்சக்கரவண்டி விற்பனைக்கு உண்டு. 40/1, றெயில்றோட் கிழக்கு ஒழுங்கை, கந்தர்மடத்தில் பார்வையிடலாம். 1452

அரியாலை செம்மணி ஒழுங்கையில் 10 பரப்புக் காணி விற்பனைக்குள்ளது. தொடர்பு கொள்ளுங்கள்:- Dr. புஷ்பநாதன், கல்தோட்டை வீதி, பலாங்கொடை. 1448

### தேவை

யாழ்ப்பாணம் றோயல் டிஸ்பென்சறிக்கு நல்ல ஆங்கிலம், கணித அறிவுள்ள பெண் உதவியாளர் உடன் தேவை. நேரில் வரவும். 1444

க. பொ. த (உயர்தர) 1979 ஏப்ரல் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவிக்கு பௌதிகவியல் பாடத்தில மீட்டல் பயிற்சிபெற டியூஷன் தேவை. விண்ணப்பிக்கவும்: 5, றக்காறோட், யாழ்ப்பாணம். 1453

### தவறிவிட்டது

எனது பாஸ்போட், அடையாள அட்டை கிளிநொச்சிக்கும், கொடிகாமத்திற்குமிடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்கண்ட விலாசத்தில் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். எஸ். சந்தசாமி, காப்பாளர், இ. போ. ச. கிளிநொச்சி. 1446

## கேள்வி விளம்பரம்

### முல்லைத்தீவு பட்டினசபை

முல்லைத்தீவு பட்டினசபையால் 19-12-78 திகதியிடப்பட்ட 21-1-78ம் திகதிய ஈழநாட்டில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திலுள்ள வேலைகளின் கேள்விப்பத்திரம் கொடுக்கும் திகதியும் கேள்வி ஏற்கும் திகதியும் முறையே 1979 பெப்ரவரி 27ம், 28ம் திகதிகளுக்கு நீடிக்கப்பட்டுள்ளது

ஒப்பம்
ஆ. ஞானசேகரம்,
விசேட ஆணையாளருக்காக,
பட்டினசபை,
முல்லைத்தீவு

பட்டினசபை அலுவலகம்,
முல்லைத்தீவு.
25-01-79. 1450

யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வரையுள்ளது)

## கிறே பப்ளின் கேள்வி விண்ணப்பம்

எமது சங்க மின்தறி நிலையத்தில் உற்பத்திசெய்யப்படும் கிறே பப்ளின் (Grey Poplin) கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு.

முடிவுத் திகதி; 10-2-79.

வைப்புப்பணம் ரூபா 250/- கட்டியவர்களின் விண்ணப்பங்களே பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பொதுமுகாமையாளர்.

74/3, அல்பிறட் துரையப்பா வீதி,
யாழ்ப்பாணம்.
1979 தை 26. 1458

ஈழநாடு
The Eelanaadu

## சினிமா கட்டண உயர்வு

சினிமாக் காட்சிகளுக்குரிய பிரவேசக் கட்டணம் அதிகரிக்கப்படவிருக்கிறது உயர்வகுப்புகளுக்கு ஒரு ரூபாய் அதிகரிக்கப்படுவதிலிருந்து கலரிக்கு இருபத்தைந்து சதம்வரை கட்டணம் உயர்த்தப்படவிருக்கிறது

சினிமாக் காட்சிகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பதென்று அரசாங்கமே தீர்மானித்திருக்கிறது

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்கு நூறு கோடி ரூபாய்க்கு மேல் தேவைபென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கான நிதியைப் பெறுவதற்கு ஒரு அம்சமாக சிகரட்டின் விலையையும் குடிவகைகளின் விலையையும் அரசாங்கம் ஏற்கனவே அதிகரித்துள்ளது சினிமாக் கட்டணங்களை அதிகரிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதும் இதேநோக்கத்துக்காகத்தான்.

சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் புனரமைப்பதற்குப் பெருந்தொகைப்பணம் தேவைப்படுகிறது. எந்தெந்த வழிகளில் இவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியுமோ அவற்றைப் பெறுவதற்காக முயற்சிசெய்யவேண்டியது அவசியம்.

சிகரட்டுகளின் விலை உயர்வு, குடிவகைகளின் விலைகள் அதிகரிப்பு, சினிமா காட்சிகளின் கட்டண அதிகரிப்பு ஆகியவை சாதாரண மக்களை அதிகம் பாதிக்கக்கூடியவையல்ல.

வேறு காரணங்களினால் சிகரட்டுகளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும்போது 2, 3 மடங்கு அதிக விலைகொடுத்து அவற்றை வாங்கி உபயோகிப்பவர்களுக்கு மூன்று சத விலை உயர்வு பெரியகாரியமல்ல.

சினிமாவைப் பொறுத்தவரையில் நமது நாட்டில் மிகக் குறைந்த வருமானமுள்ளவர்களுக்கும் உள்ள ஒரேயொரு பொழுதுபோக்கு இதுவேயாகும். படமாளிகைகள் பலவும் நல்ல வருமானத்தைச் சம்பாதிக்கின்றன என்று சொல்லலாம். புதிய படங்கள் திரையிடப்பட்டதும் தினமும் பல காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன.

ஆனால் படமாளிகைகள் பலவற்றிலும் ஆசனவசதிகளும் சுகாதார வசதிகளும். மிக மோசம், பணத்தைக் கொடுத்து வெய்யிலிலும் மழையிலும் பனியிலும் காய்ந்து, நனைந்து, இடிபட்டு, மிதிபட்டு சிலசமயங்களில் உதையும்பட்டுப் படம்பார்க்கும் அவலநிலையையும் பார்க்கலாம்.

ஏற்கனவே அதிக கட்டணம்கொடுத்து வசதிக்குறைவை அனுபவித்து வந்த ரசிகர்கள் சூறாவளியால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்புக்காக மேலும் சிறிது பணத்தைக் கொடுப்பதால் ஒன்றும் பெரிய நஷ்டமேற்பட்டுவிடாது.

இதேசமயம் படமாளிகைகளின் ஆசனவசதிகளையும் சுகாதார வசதிகளையும் கவனித்து உரிய நடவடிக்கை எடுக்கவேண்டிய பொறுப்பும் கடமையும் உள்ளூராட்சிமன்றங்களுக்குண்டு.

# உபவேந்தர் பீடத்தில் நாடறிந்த நற்கலைஞன்

மாணவர் மத்தியில் ஒருவித மகிழ்ச்சி அலை - எழுத்தாளர் மன்றுகளில் ஒருவகைப் பெருமிதம் - கலையுலகில் கட்டறுத்துப் பிரவாகிக்கும் பேருவகை - மக்கள் நினைவோடையில் மூகிழ்தெழும் குதூகல உணர்வு - இத்தனைக்கும் காரணம் கற்றறிந்த வல்லுநன் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள் யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பீடத்தில் கொலுவீற்றிருப்பதுதான் ஈழத் தமிழ் பிராந்தியத்தில் அமைந்துள்ள முதலாவது பல்கலைக்கழகத்தில் முதலாவது உபவேந்தராக அவரை அமர்த்தியதை நினைந்து கலைஇலக்கிய உலகம் குதித்துக்கூத்திடுகிறது

ஊக்கத்தால் உன்னதத்தால் உந்திநின்ற கல்வி கலை வேட்கையால், வாழ்க்கைத் தடத்தில் படிமுறையாய் முன்னேறி சிகரத்தை எட்டிவிட்டார் கலாநிதி சு. வித்தியானந்தன் அவர்கள். சாதாரண விரிவுரையாளராய், பின் சிரேஷ்ட விரிவுரையாளராய், தமிழ்துறை பேராசிரியராய், யாழ் வளாகத் தலைவராய் கடமையாற்றி அனுபவமுதிர்ச்சியுடன் உபவேந்தராய் உயர்ந்துளளார்.

தலைக்கனம் சிறிதுமின்றி, உயர்ந்த உளப்பாங்குடன், கருக்விடாது காத்திடும் நோக்குடன் புன்முறுவல் சிந்தி பல்கலைக்கழக மாணவரை ஆற்றுப்படுத்திய பெருமை இவருக்குண்டு.

இவரது எண்ணக்குவியல்கள் கட்டுரை உருவில், பல கலை இலக்கிய ஏடுகளை, சஞ்சிகைகளை, பத்திரிகைகளை அணிசெய்து வாசகர் வட்டத்தை வளம்செய்ததை நாடறியும். 'பத்துப்பாட்டு', 'தமிழர் சால்பு' 'இலக்கியத்தென்றல்' 'கலையும் பண்பும்', மன்னார் நாட்டுப்பாடல்கள்' என்பவை நூலுருப்பெற்று பயன் தந்தவற்றுள் சில.

பல்கலைக்கழகத்தில் சங்கம் அமைத்து கலைஇலக்கியத் துறையில் மாணவர்களை ஈடுபட வைத்தாரெனினும், முடிசூடிய பணியாக நாட்டுக்கூத்துக்களை புடம்செய்தமையைக் குறிப்பிடலாம், இவரது அரவணைப்பில், சிங்களக் கலைஞர்களே வியக்குமளவுக்கு பலதிக்கும் பவனிவந்த 'கர்ணன் போர்', 'நொண்டி நாடகம்', 'இராவணேஸ்வரன்' முதலிய ஆட்ட நாடகங்கள் இன்றும் எம் மனமேடையில் கூத்திடுகின்றன. நாட்டுக்கூத்துக்கு புத்துயிர் அளித்ததுடன் மட்டுமல்லாது நவீன நாடகங்களையும் கலைக்கழகத் தலைவராகப் பணிபுரிந்தவேளை தரமுயர்த்தி மகிழ்ந்தார் பாடசாலை நாடகப்போட்டிகள், நாடக எழுத்துப் போட்டிகள், கருத்தரங்குகள் என்றெல்லாம் அமைந்து கணிசமான வளர்ச்சியை இத்துறையில் ஏற்படுத்தினர். பயனடைந்த கலைஞர்கள் ஏராளம்; ஏராளம்.

இவரது வைர நெஞ்சை, துணிவினை, எடுக்கும் கருமத்தை திறம்பட முடிக்கும் திறனை தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடந்தவேளை நம்மவரால் எடைபோட முடிந்தது. எத்தனையோ எதிர்ப்புகள் மத்தியில், மயங்கி விழவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள்ளான போதும், துணிவுடன் அம்மகாநாட்டை வெற்றியுடன் நடாத்தியபெருமை இவருக்குண்டு. ஆம் தமிழ் உணர்வு இவர்தம் உதிரத்தின் ஒவ்வொரு துளியிலும் பிறிந்கிறது.

இத்தனைக்கும் மேலாக மக்களை மக்களாக மதித்தும் துன்புறுதவகையில் தொடர்பினை வைத்தும், மன்னிக்கும் மனப்பான்மையை பெரிதும் வளர்த்திட்ட பெருமகன்தான் திரு சு. வித்தியானந்தன் அவர்கள். இவரது தலைமையில் பல்கலைக்கழகம் தனிச் சிறப்படையவும இவர்தம் வாழ்வு மென்மேலும் வளம் பெறவும் யாழ் - இலக்கிய வட்டம் வாழ்த்துகிறது.

ஏ. ரி. பொன்னுத்துரை
(தலைவர் - யாழ். இலக்கிய வட்டம்)

# மக்கள் கருத்து

## தமிழர் கூட்டணி தடம்புரள்கிறது!

1979 ஜனவரி 12ம் நாள் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான செய்தியில் ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினர் தம் சொற்பொழிவில் 'மாவட்ட மந்திரிப் பதவிகளால் எங்களை விலைக்கு வாங்க அரசாங்கம் கனவு காண்கின்றது' என்கின்றார். 6 மாதங்களுக்கு முன்பு தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவிடம் சென்று தம்மில் சிலரை மாவட்ட மந்திரிகளாக நியமிக்கக் கோரியது, உண்மையில் நடவாத ஒரு சம்பவமா? மீண்டும் ஏறத்தாழ இரண்டு மாதங்களளவில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர்களிற் சிலர் யாழ்ப்பாணத்திற்கும், முல்லைத்தீவிற்கும் ஒரு சில காலத்திற்கேனும், மாவட்ட மந்திரிகளாக யாரையும் நியமிக்கவேண்டாமென ஜனாதிபதியைக் கோரியதுகூட நடைபெறாத ஒரு சம்பவமா? தங்கள் நாடாளுமன்ற உறுப்பினரில் ஒரு சிலரைத்தானும் மாவட்ட மந்திரிகளாக நியமனம் பெறச் செய்வதற்குத் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி தங்கள் நிலையிலிருந்து தடம்புரள்வது தெளிவாகவில்லையா? ஒரு சில வேளை அவர்கள் ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினரை இருட்டில் வைத்திருக்கலாம் ஆனால் அவர் யாரை முட்டாளாக்க முயல்கின்றார்?

அதே விழாவில் பேசிய வணபிதா சிங்கராசா மக்க

[4-ம் பக்கம் பார்க்க]

## வேந்தரே வித்தியரே மெய்ஞ்ஞான தத்துவரே!

- கவிஞர் அரியாலையூர் வே. ஐயாத்துரை -

வித்தியா தர்மம் விளங்க விரிவுரைசெய்
வித்தியா னந்தன் விற்பனரே—வித்தியெனும்
கல்விப் பெயர் முதலாய். கற்றுவந்த கண்ணியத்தால்
பல்கலைக்கண் வேந்தானீர் பார்

பாராளும் வேந்தரிலும் பார்க்கப் பகுத்தறிவுக்
கூராளும் வேந்தர் குணமுளரே—நேராளும
வித்தியா னந்தனுப வேந்தரே செந்தமிழைத்
தித்திக்கச் செய்வீர் தினம்

தினமும் தெவிட்டாத தேனூர் தமிழ்செய்
மனமும் செயலும் மலர்ந்தீர்—புனிதபூயர்
வேந்தரே வித்தியரே மெய்ஞ்ஞான தத்துவரே
ஏந்தலே வாழ்க இனிது

இனிது தமிழினிது என்றூலும் வித்தி
தனது தமிழே தமிழாம்—எனமொழிய
ஆளும் தகவார்ந்த அன்பார்ந்த வித்தியரே
வாழுவீர் வாக்கே வளர்ந்து

வளர்க நுமதுபணி வாழ்த்துகிறோம் அன்பார்
உளமெய் மகிழ்வுற்றே ஒன்றி—அழகே
மிளிருமுயர் வித்தியரே விற்பனரே! வாணி
விழியருளால் வாழ்வீர் விளைந்து.

## மஹா கும்பாபிஷேகம்

(ஊரெழு)

ஊரெழு ஸ்ரீ கண்ணகை மீனாட்சி அம்மன கோவிலின் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் பெப்ரவரி முதலாம் திகதி காலை நடைபெறவிருக்கிறது ஈழத்திலுள்ள பிரபல சைவாலயங்களைச் சேர்ந்த குருமார்கள் மேற்படி கும்பாபிஷேகத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்கவிருக்கிறார்கள் கும்பாபிஷேகம் தொடர்பான சகல கிரியைகளும் நாளை ஆரம்பமாகிறது

கும்பாபிஷேகத்தையொட்டி சிறப்பு அம்சமாக சாந்தானந்தா சுவாமிகளின் பஜனைப் பாடல் நிகழ்ச்சியும் நடைபெறுகிறது.

## மணிவாக்கு

நீராடுவதால் உடல் தூய்மையாகிறது இறைவனைப்பற்றி எண்ணுவதால் உள்ளம் தூயதாகிறது.

—விவேகானந்தர்

## இன்றைய இராசிப்பலன்

தை மாதம் 14-ந் திகதி
சனிக்கிழமை
(27-1-79)

**மேடம்:-** அரசியல்வாதிகளுக்கு நன்மை கிடைக்கும், தொழில் புரியும் இடத்தில் நல்ல மாற்றங்கள் ஏற்படும், குழந்தையொன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும்.

**இடபம்:-** நம்பிக்கை மோசடி நடக்கும், வியாபாரத்துறையில் நஷ்டமேற்படும், அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும்.

**மிதுனம்:-** பிரமச்சாரிகள் வாழ்க்கையில் மாரனின் கணை தாக்கும், ஸ்திரவழியால் சுகம் உண்டு. குடும்பத்தில் பாசத்தின் பிணைப்பு இறுகும்.

**கடகம்:-** எதிர்பாராத முனையிலிருந்து ஆபத்து உருவாகும், உள்வீட்டிலேயே சிறிய பூசல்கள தோன்றக்கூடும், தெய்வ வழிபாடு விரும்பத்தக்கது.

**சிங்கம்:-** பெருமையுடன் தலைநிமிர்ந்து வாழுவீர்கள் பிதாவழித் தனமும் சேரும்' தானதருமங்களில் ஈடுபாடு ஏற்படும், புகழுக்கும் இடமுண்டு.

**கன்னி:-** வியாபாரத் துறையில் அதிக லாபம் கிடைக்கும், முன்னேற்றம் தென்படும், சிலருக்கு இடமாற்றமும் ஏற்படும்.

**துலாம்:-** நினைத்த காரியத்தில் வெற்றியுண்டு, எதிர்பாராத வகையில் ஆதரவு பெருகும், பண விவகாரத்தில் நல்ல திருப்பம் ஏற்படும், சிறப்பான தினம்

**விருச்சிகம்:-** கழுகுப் பார்வை உங்களை வட்டமிடும், வாகனம் செலுத்துவோர் அதிக கவனம் செலுத்தவும், தொழில்புரியும் இடத்தில் பொறுமை வேண்டும்.

**தனுசு:-** குடும்பத்தில் சுகக்குறைவுகள் தென்படும், அதிக அலைச்சலன் மூலம் கவலைகள் உருவாகும், உணர்ச்சி வசப்படாது இருக்கவும்.

**மகரம்:-** பொருள் வரவுக்கு இடமேற்படலாம், சுற்றுடலில் மதிப்பு உயரும் குடும்பத்திலும் அமைதி நிலவும்.

**கும்பம்:-** ஏமாற்றத்தின் எதிரொலி பழிவாங்கும், எதிலும் தயக்கநிலை தென்படும், நஷ்டத்திற்கு இடமுண்டு. பிணிக்கு இடங்கொடாது இருக்கவும்.

**மீனம்:-** வாகன விருத்தியுடன் வரவலும் திருப்தி காணும், மோசன வாழ்வு கிட்டும், முன்னேற்ற வாழ்வும் உண்டு. புதிய முயற்சிகள் கைகூடும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## கும்பாபிஷேகம்

(கொழும்பு)

கொழும்பு தெகிவளை மஹா விஷ்ணு கோவில் மகாகும்பாபிஷேகம் அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவிருக்கிறது. இம்மாதம் 29ம் திகதி கர்ம ஆரம்பம் நவாலி பிரதிஷ்டா சிரோமணி சிவஸ்ரீ சுவாமி விஸ்வநாதக்குருக்கள தலைமையில் சுமார் 10 குருமார் கிரியைகளை நிறைவேற்றுவர். மகாலக்குமி, மஹா விஷ்ணு, விநாயகர் சந்தான கோபாலர் ஆகிய மூலஸ்தான பரிவார மூர்த்திகளுக்கு பல்வேறு குருமார்கள் தலைமையில் பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் நடைபெறும்.

# ஈரானில் ராணுவ புரட்சி நடக்குமா?

மாஸ்கோ, ஜன. 26

''ஷாப்பூர் பக்தியார் அரசாங்கம் நிலைக்கமுடியாது. அதற்கு ஷா மன்னரின் ஆசி கிடைத்ததும், அதை வாஷிங்டன் ரகசியமாக ஆதரித்து உருவாக்கியதும் பிரதிகூலமாக இருப்பதுடன, நாட்டின் நிலையில் காத்திரமான தாக்கம் எதையும் அதற்கு ஏற்படுத்தமுடியாதஇயலாத்தனம் பிரதான காரணமாகவுள்ளது'' என்று ஏ பி என். விமர்சகர் எழுதியுள்ளார்.

''பக்தியார் அரசாங்கம் வீழ்ந்ததும் ராணுவப்புரட்சி வெடிக்குமா? தன்னைத்துரத்தினால் ஒரு லட்சம் ராணுவம் ஆட்சி லகானைச் கைப்பற்றும் என்று பக்தியாரே வானொலிப் பேட்டியில் பயமுறுத்தியிருக்கிறார்.

இந்து மகாசமுத்திரத்திலும் பாரசீகவிரிகுடாவிலும்போர்க் கப்பல்கள் நடமாடுவது ஈரான் ராணுவத்துக்கு தைரியமூட்டி ராணுவப்புரட்சியை தூண்டும் அளவுக்கு முன்னேறியுள்ளது. ராணுவப்புரட்சியால் பிரச்னைக்கு பரிகாரம் காணமுடியாது அதுநிலைமையைமேலும் சிக்கலாக்குமேதவிர சுலபமாக்காது. அரபு உலகில் இது கவனத்துக்கு எடுக்கப்பட்டுள்ளது'' என்றும், ஏ பி, என். விமர்சகர் கூறுகிறார்.

# நாகாலாந்தில் வெளியார் தலையீடு

## ''நேஷனல் ஹெரல்ட்'' எச்சரிக்கை

புதுடில்லி ஜன 26

நாட்டின் வட-கிழக்குப் பிரதேசத்தில் உள்ள நாகாலாந்திலும், மிஸோராமிலும்கிளர்ச்சிக்காரர்கள் செயல்படுவது காரணமாக நிலைமை சிக்கலாகி வருகிறது என்று 'நேஷனல் ஹெரல்ட்' பத்திரிகை எழுதியுள்ளது.

அஸ்ஸாம் ராஜ்யத்து சிட்ஸகார் மாகாணத்திலுள்ள சில கிராமங்கள் மீது கிளர்ச்சிக்காரர்கள் ஆயுதசகிதம் தாக்குதல் நடத்தியுள்ளனர். இச்சம்பவங்களின் போது 50 சிவிலியன்கள் மாண்டனர். முன்னர் நாகாலாந்திலும், மிஸோராமிலும மாத்திரம் வெடித்த பிரிவினைவாதிகளின் நடவடிக்கை சிக்கிம், மணிபூர் ராஜ்யங்களுக்கும் பரவியுள்ளன. பிரிவினைவாதிகளுக்குப் பக்கபலமாக பீகிங் செயல்படுகிறது இந்தியாவின் ஒருமைப்பாட்டை மட்டந்தட்டி பலவீனப்படுத்துவதே சீனாவின் நோக்கமாக உள்ளது'' என்று பழம்பெரும் காங்கிரஸ் பத்திரிகையான 'நெஷனல் ஹெரல்ட்' கூறுகிறது

''கடந்த 6 மாதகாலத்தில் சீனாவில் பயிற்சிக்கப்பட்ட 100 ஒற்றர்களையும், நாசவேலைக்காரர்களையும் இந்தியாவுக்குள் சீனா.புகுத்தியுள்ளது. இது இந்தியாவின் பந்தோபஸ்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் தடையாகவுள்ளது மேலும் நேபாளத்திலுள்ள கூம்பி பள்ளத்தாக்கில ராணுவப் படைகளை சீனா குவித்து வருகிறது. சில அண்டை நாடுகளில் தூதுவராலயங்கள் திறக்கப்பட வேண்டுமென்று பூட்டான் தேசிய அசெம்பிளி கோரிக்கை விடுத்திருப்பதும், மத்திய அரசை மீறி வெளியுலகுடன் சுயேச்சையான தொடர்புகளை ஸ்தாபிக்க முனைவதும் சிந்தனையைத் தூண்டும் விஷயங்களாகும்'' என்றும் இப்பத்திரிகை எழுதியுள்ளது.

# சோவியத் பூச்சாண்டிபற்றி 'பிராவ்தா'

மாஸ்கோ, ஜன. 26

''சில மேற்கு நாடுகளின் விசேஷநலன்களுடன் உலக அல்லது பிராந்திய அபிவிருத்தி நிலைமை ஆகியவை ஒத்துவராத பட்சத்தில் 'சோவியத் ஆபத்து'' என்றுகூச்சலிடுகின்றனர்'' என்று' பிராவ்தா' எழுதியுள்ளது.

ஆக்கிரமிப்புகளையும், அந்நிய நாடுகளின் உள்நாட்டுவிவகாரங்களில் தலையிடுவதையும் நியாயப்படுத்த 'சோவியத்பூச்சாண்டி' கருவியாக உபயோகிக்கப்படுகிறதென்று கம்யூனிஸ்ட்கட்சியின் 'பிராவ்தா' பத்திரிகை கூறுகிறது

''ஈரானுக்கு அண்மையில் பாரஸீகக் குடாவில் ரோந்து செய்துகொண்டிருப்பதுசோவியத் போர்க்கப்பல்கள் அல்ல, அமெரிக்க போர்க்கப்பல்களே. ஈரான்மக்களின் வெஞ்சினத்துக்கு இலக்காகியுள்ள 'ஸவாக்' ரகசிய பொலிஸை பயிற்சித்து, பாடம்புகட்டியது சீ. ஐ. ஏ தான். மக்கள் எழுச்சியை அடக்கியொடுக்க பாவிக்கப்படுவதும் அமெரிக்கா வழங்கிய ஆயுதங்களே ஆனால் தலையீடு ''சோவியத் தலையீடு'' என்று மாத்திரம் ஒப்பாரிவைக்கப்படுகிறது அண்மையில் யார் ஈரான் விவகாரத்தில் தலையிடுகின்றனர் என்பதை மக்கள் அறிவார்களென்று 'பிராவ்தா' எழுதியுள்ளது.

''அமெரிக்க ராணுவத்தின் பாத்திரத்தை இப்பிராந்தியத்தல் அதிகரிக்கவேண்டுமென்று பென்டகன் கருதுவதாக ''நியூயோர்க் டைம்ஸ்'' கருதுகிறது. பக்தியார் அரசாங்கம் நிலைமையைச் சமாளிக்கத் தவறினால் ஈரானில் ராணுவ சர்வாதிகாரத்தை ஸ்தாபிக்க வேண்டுமென்ற பேச்சும் அடிபடுகிறது. இது வெறும்பேச்சு மாத்திரமல்ல என்று கருத, போதிய ஆதாரமிருக்கிறது'' என்றும் 'பிராவ்தா' எழுதியுள்ளது.

# பொலிசார் நடவடிக்கை

[புலோலி]

பருத்தித்துறைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுவரும் கொலை, கொள்ளைச் சம்பவங்களைத் தடைசெய்வதற்கு பருத்தித்துறைப் பொலிசார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றனர். (க)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவில் அடுத்த மாதம் ஏழாம் திகதி முதல் பத்தாம் திகதி வரை யாழ் பொதுசன நூலகத்தில் விவசாய, கைத்தொழில் நூல், விளக்கப்பட கண்காட்சியொன்று நடைபெறவுள்ளது. (கெ)

# சுவீப் முடிவுகள்

கொழும்பு தேசிய லொத்தர் சபை தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற 701-வது தேசிய லொத்தர் சீட்டிழுப்பின் முடிவுகள் வருமாறு:-

முதலாம் பரிசு
**17 O 0873**
ரூ. 100,000-00

இரண்டாம் பரிசு
**21 R 0770**
ரூ. 40,000-00

மூன்றும் பரிசு
**27 O 0855**
ரூ. 10,000-00

தலா ரூபா 1,395/75 கொண்ட 100 ஆறுதற் பரிசுகள்.

| | |
|---|---|
| 06 A 0590 | 18 A 0330 |
| 20 A 0927 | 14 B 0920 |
| 16 B 0558 | 17 B 0933 |
| 26 B 0227 | 03 C 0664 |
| 01 C 0893 | 24 C 0845 |
| 31 C 0962 | 11 D 0010 |
| 13 D 0582 | 04 E 0886 |
| 08 E 0846 | 11 E 0218 |
| 14 E 0408 | 26 F 0342 |
| 03 F 0666 | 16 F 0897 |
| 22 F 0494 | 11 G 0589 |
| 11 G 0937 | 25 G 0071 |
| 28 G 0560 | |
| 10 H 0991 | 11 H 0079 |
| 12 H 0872 | 14 H 0752 |
| 24 H 0497 | 30 H 0261 |
| 04 J 0047 | 17 J 0982 |
| 20 J 0214 | 27 J 0537 |
| 29 J 0335 | 30 J 0961 |
| 13 K 0532 | 13 K 0620 |
| 22 K 0293 | 27 K 0909 |
| 05 L 0468 | 11 L 0350 |
| 02 M 0469 | 06 M 0413 |
| 09 M 0619 | 09 M 0910 |
| 12 M 0691 | 16 M 0639 |
| 29 M 0244 | 04 N 0940 |
| 09 N 0061 | 27 N 0894 |
| 03 O 0277 | 05 O 0984 |
| 08 O 0658 | 16 O 0966 |
| 24 O 0690 | 24 O 0926 |
| 26 O 0396 | 10 P 0456 |
| 14 P 0629 | 17 P 0261 |
| 24 P 0430 | 25 P 0421 |
| 31 P 0162 | 01 Q 0025 |
| 06 Q 0453 | 09 Q 0988 |
| 15 Q 0844 | 25 Q 0958 |
| 17 R 0200 | 20 R 0056 |
| 31 R 0911 | 10 S 0973 |
| 12 S 0089 | 31 S 0226 |
| 15 T 0392 | 17 T 0611 |
| 20 T 0187 | 22 T 0417 |
| 24 T 0037 | 25 T 0725 |
| 27 U 0466 | 28 U 0853 |
| 09 V 0181 | 01 W 0980 |
| 05 W 0234 | 05 W 0805 |
| 26 W 0817 | 28 W 0345 |
| 29 W 0298 | 01 X 0511 |
| 02 Y 0257 | 08 Y 0343 |
| 14 Y 0782 | 11 Z 0251 |
| 17 Z 0871 | 21 Z 0850 |
| 27 Z 0254 | |

(இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

# தமிழர்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி

ளைப் பதவிகள், சலுகைகள், உதவிகள், வேலைவங்கிப் படிவங்கள் ஆதியவற்றை உதறித்தள்ளும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஆனால் கடந்த டிசம்பர் 20ம் திகதி ஊர்காவற்றுறை நாடாளுமன்ற உறுப்பினருடன் தொலைபேசியில் நான் உரையாடுகையில் முன்சொன்ன அனைத்தையும் பெற்றுக்கொள்வது அவசியமென்று சொல்லுகிறேன்பதும் அன்று அவர் சொல்லாமல்விட்டது தமிழ் ஈழத்தைக் காற்றில் பறக்கவிடுகின்றோம் என்பதுமட்டும்தான் என்பதையும் வணபிதா அவர்கள் அறியின் அவர் அதிர்ச்சி அடைவார் என்பது நிச்சயம்.

இப்படிக்கு,
ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்),
பொதுச் செயலாளர்,
அ. இ. த. கா.

# கல்வயல் கிராமத்திற்கு மின்சாரம் கிடைக்கும்

(கொச்குவில்)

சாவகச்சேரி தொகுதியில் உள்ள கல்வயல் கிராமத்திற்கு மின்சாரம் வழங்கநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் இதற்கெனப் பணம் ஒதுக்கியுள்ளார்.

அப்பகுதி மக்களின் கோரிக்கையை ஏற்று சாவகச்சேரி எம். பி. மின்சாரத்திற்கென பணம் ஒதுக்கியுள்ளார் மின் இணைப்பு ஆரம்பவேலைகள் தொடங்கியுள்ளன. [க]

# லாபம் கிடைத்தது

(வண்ணார்பண்ணை)

உடுவில் பிரிவு கமத்தொழில் விளைவுப் பெருக்கக்குழு, இப்பிரிவு கமத்தொழிற் சேவை நிலையத்தின்மூலம் கடந்த வருடம் பதினோராயிரம் ரூபாவை லாபமாகப் பெற்றுள்ளது இக்குழு அரசாங்க உத்தியோகத்தர்களைக்கொண்டதாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# குருநாகலுக்கு இடமாற்றம்



கடந்த எட்டு ஆண்டுகளாக கிளிநொச்சி நீர்ப்பாசனப் பகுதிப் பொறியியலாளராகப் பணியாற்றிய திரு சந்தையா பயில்வாகனம் இப்மாதத்திலிருந்து குருநாகலுக்கு இடமாற்றம் பெற்றுள்ளார், உடுவிலைப் பிறப்பிடமாகக்கொண்ட இவர்கிளிநொச்சித் தொகுதியில்தாம் பணியாற்றிய காலத்தில்விவசாயத்துறை அபிவிருத்திக்குப் பெரிதும் உழைத்தார். அனுபவமும் கடமையுணர்வும் ஊழியர்கள், மற்றும் பொதுமக்களுடன் பழகும் பண்பும் எல்லோராலும் மதிக்கப்பட்டன.

# தமிழகத்தில் ஸ்கந்தா சாரணர்கள்

[சென்னை]

தென் இந்தியாவின் மறைமலையடிகள் நகரிலே தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்திய எட்டாவது ஆண் பெண் சாரணர் ஜம்போரியில் கலந்துகொள்வதற்காக இலங்கையிலிருந்து சென்ற சாரணர் குழுவில் சுந்தரோடை ஸ்கந்த வரோதயக்கல்லூரிச் சாரணர் படையினரும் கலந்துகொள்கின்றனர்.

இக்குழுவில் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரிச் சாரண ஆசிரியர் திரு க. மு. மாணிக்கம் உப சாரணர் குழுத் தலைவராகச் சென்றுள்ளார். ஸ்கந்தாச் சாரணர்களான சு. சிவகர்ணன். சி. பரேந்திரா, செ. ஸ்ரீகாந்தன் ஆகியோரும் சென்றுள்ளனர். இவர்கள் ஜம்போறியில் பங்குபற்றிய பின் இம்மாதம் 29ந் திகதி வரை தமிழகத்தில் தங்கியிருந்து, புனித ஸ்தலங்களுக்கும் சென்று தரிசித்துத் திரும்புவர்.

# சிறுவர் போட்டி

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சிறுவர் ஆண்டை முன்னிட்டு, யாழ் பொதுசன நூலக அங்கத்துவம்பெற்றவர்களுக்கான சித்திர, கவிதை, கதை, பேச்சுப்போட்டிகள் ஜூலை மாதத்தில் நடைபெறவுள்ளன.

சித்திரப்போட்டியில் பங்கு கொள்ளும் சிறுவர்கள், சிறுவர்பகுதி நூலக பொறுப்பாளருடன் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளனர்.

# இரதோற்சவம்

(சப்பனை)

மாத்தளை முத்துமாரியம்மன் கோவில் இரதோற்சவம் மார்ச் மாதம் 11-ந் திகதி நடைபெறவிருக்கின்றது.

பெப்ரவரி 21-ந்திகதி கொடியேற்றத்துடன் மேற்படி திருவிழா ஆரம்பமாகின்றது. பங்குனி மாதம் 10ந் திகதி தீக்குளிப்பும், 13-ந் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

திருவிழாக் காலங்களில் சங்கீதகதாகாலட்சேபமும் இடம் பெறும்




குமுலுஸ் எஸ்
நீரில் கரையக்கூடிய 80% கெந்தகம்
விவசாயிகளே
இதோ ஒரு நற்செய்தி!

மிளகாய்ச் செடியை தாக்கும் இலை சுருட்டி நோயைத் தடுப்பதற்கு ''குமுலுஸ் எஸ்'' பாவித்து அமோக விளைச்சலைப் பெறுங்கள்.

மேலும் சிறு பயிர்களை தாக்கும் பங்கஸ்சு நோய்களை ''குமுலுஸ் எஸ்'' கட்டுப்படுத்தும்.

மேற்கு ஜெர்மனியைச் சேர்ந்த பி. ஏ. எஸ். எப். (BASF) கம்பெனியாரால் தயாரிக்கப்படுகிறது. உங்களுக்கு கெந்தகம் தேவைப்படின் ''குமுலுஸ் எஸ்'' என்று கேளுங்கள்.

கிடைக்குமிடம்: சகல விவசாய இரசாயனப் பொருள் விற்பனையாளரிடமும்,
M LIMITED மக்லூட்ஸ் லிமிட்டெட்
297, யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
தொலைபேசி: 32941-5.



**நாகம்ஸ்**
(சுன்னுகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
முத்துராமன் - விஜயா
**தீர்க்க சுமங்கலி**

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
COUNT DOWN TO
**Doom's Day**
(Color-Scope)

## வரட்சி நீங்கியது

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பின் சகல பகுதிகளிலும் சூறுவளியின் பின்னர் ஏற்பட்ட வரட்சியைத் தொடர்ந்து இப்பொழுது தினசரி மழை பெய்கிறது. இதனுல் விவசாயப் பிரதேசமான கன்னன்குடாப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட குறுகியகால விவசாயம் கடந்த வாரம் தொடக்கம் சில இடங்களில் அருவடைக்குத் தயாராகியுள்ளது.

தினசரி 4 காட்சிகள் 2-வது வெற்றிவாரம்
**ராணி** (யாழ். நகர்) எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி நடித்த
**சக்கரவர்த்தித் திருமகள்**
(புதிய பிரதி)

**மனோகரா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—மஞ்சுளா
**அன்பே ஆருயிரே**
(கலர் புதியபிரதி)

5-வது ஜனத்திரள் வாரம்
**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) போன்: 466 தினசரி 5 காட்சிகள்
10-30, 1-30, 4-00, 7-00, 10-00
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)

மகத்தான 2-வது மாதம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
**உயர்ந்தவர்கள்**

2-வது ஜனத்திரள் வாரம்
**ராஜா** (யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
**பயணம்**

**SHANTHI** Jaffna DAILY 4 SHOWS
10-30, 4-30, 7-00, and 9-30
"Colonel Wolodyjowski"
Scope - Color - War Film
பல லட்சத்தில் தயாரானதும் குதிரை ஓட்டங்கள் சண்டைகள் நிறைந்ததுமான பிரமாண்ட படைப்பு.
Also : SEVEN NIGHTS IN JAPAN - Trailer

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) கடைசி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - சுஜாதா - கமலஹாசன் - சுமித்ரா
**லலிதா**

**லிடோ** (யாழ். நகர்) போன்: 7606 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
**ஆசை அறுபதுநாள்**

**REGAL** (Jaffna) NOW SHOWING
Daily at, 4-30, 7-00 & 9-30 p m.
**BROADWAY DEADLY GOLD**
(Color- Spy Action Film)
Rumanian Film Festival
From 29 th January to 3rd February 1979
29-1-79 "THE IMMORTALS"
30-1-79 "ROCK'N ROLL WOLF"
31-1-79 "THE GREED"
1-2-79 "THE HAWKS"
2-2-79 "WITH CLEAN HANDS"
3-2-79 "THE LUST OF GOLD"

# 'ஈழநாடு' வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

## நாளை சாம்பியன்' ஆட்டம்

காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக் கழகத்தின் 10-வது ஆண்டு விழாவை யொட்டி "ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்திற்காக 25ம் திகதி முதல் மின்னொளியில் நடைபெற்றுவரும் பாடசாலைகளுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் சாம்பியன் ஆட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை இரவு 7-30 மணிக்கு நடைபெறும்.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் நடைபெறும் இப்போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரி மோத இருக்கின்றது.

இச்சுற்றுப்போட்டியில் இதுவரை நடைபெற்ற போட்டிகளில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி 8-1 கோல்களால் வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையை வெற்றியீட்டியது. யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக்கல்லூரி 4-1 கோல்களால் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியைத் தோற்கடித்தது.

பார்வைக் காட்சிகளாக இடம்பெற்றபோட்டியில் நாவலப்பிட்டி உதைபந்தாட்டக் கோஷ்டியினரும், குப்பிளான் விக்னேஸ்வரா சனசமூகநிலையத்தினரும் தலா இரண்டு கோல்கள் போட்டதினுல் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றது. 25ம் திகதி நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி 2-1கோல்களால் நாவலப்பிட்டி உதைபந்தாட்டலீக்கோஷ்டியினரை தோற்கடித்தது. இரண்டாவது போட்டியில் காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக்கழகத்தினர் 5-1 கோல்களினுல் மயிலிட்டி அண்ணாவிளையாட்டுக்கழகத்தினரை தோற்கடித்தனர்.

### இன்றைய போட்டி

இன்றையபோட்டியில் 3ம் பிரிவுக்கோஷ்டியான இளவாலை சென். ஹென்றீஸ்கல்லூரியினர் காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து போட்டியிடுவார்கள். இரண்டாவது போட்டியில் வவனியா ஐக்கிய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து இளவாலை சென். ஹென்றீஸ் கல்லூரியினர் மோதுவார்கள். மூன்றாவது போட்டியில் கண்டி சன்றைஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்துத்தென்மயிலை ஞானோதயா விளையாட்டுக்கழகத்துடன் மோதுவார்கள்.

### நாளைய போட்டி

நாளையதினம் நடைபெற இருக்கும் முதலாவது போட்டியில் வவனியா ஐக்கிய விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காங்கேசன்துறை யங்ரோயல் விளையாட்டுக் கழகத்தினரும் இரண்டாவது போட்டியில் கண்டி சன்றையிஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வெட்டித்துறை புளூஸ் விளையாட்டுக் கழகமும் மோதும். அதைத் தொடர்ந்து ஈழநாடு வெற்றிக்கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி நடடபெறும். போட்டிகள் முடிவடைந்த பின்னர் சகல பாதைகளிலும் விசேஷ பஸ் போக்குவரத்து சேவைகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

## உதைபந்தாட்டப் போட்டி

[பலாலி]

வயாவிளான் ஞானவைரவர் சன சமூக நிலையம் நடாத்திவரும் அமரர் சி. கந்தவனம் ஞாபகார்த்தக் கேடயத்திற்கான 1ம் பிரிவு நொக் அவுட் உதைபந்தாட்டப் போட்டியின் 7 வீரர் ஆட்டத்தில் திருநெல்வேலி இந்து இளைஞர் வி. கழகம் 4—2 கோல்களால் பலாலி அண்ணா வி. கழகத்தை வென்றுள்ளது.

அளவெட்டி வளர்மதி வி. கழகத்திற்கும், திருநெல்வேலி பாரதி புலம் ஒலம்பிக் வி கழகத்திற்குமிடையே நடைபெற்ற 11 வீரர் ஆட்டம் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இதனுல் இக்கழகங்களுக்கு மீண்டும் 29ம் திகதி போட்டியிடுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டது. இரு போட்டிகளுக்கும் திரு. எம். ஜெகநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

## அரைஇறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும்

[பலாலி]

வயாவிளான் ஞானவைரவர் சனசமூகநிலையம் நடாத்திவரும் 1ம் பிரிவு நொக்-அவுட் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறும். இன்றைய ஆட்டத்தில் 11 வீரர் பிரிவில் பலாலி அண்ணா விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதிக் கொள்ளவிருக்கிறது. தொடர்ந்து இடம்பெறும் போட்டியில் கொழும்புத்துறை ஜெட்லைனேஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆவரங்கால் சர்வோதய விளையாட்டுக் கழகம் போட்டியிடும்.

### நாளைய போட்டி

நாளை இடம்பெறும் 7 வீரர் போட்டியில் ஊறணி புனித அந்தோனியார் இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநெல்வேலி இந்து இளைஞர் வி. கழகம் போட்டியிடும். மற்றுமொரு போட்டியில் ஆவரங்கால் ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து குப்பிளான் விக்னேஸ்வரா வி. கழகம் மோதிக்கொள்ளும்.

11 வீரர் போட்டியில் சனிக்கிழமையன்று இடம்பெறும் போட்டியில் வெற்றிபெறும் கழகம், ஜொலி பேட்ஸ் வி. கழகத்துடனை 11 வீரர் ஆட்டத்தில் மோதிக்கொள்ளும். இப்போட்டிகள் அனைத்தும் நிலைய விளையாட்டு மைதானத்தில் இடம் பெறும். அரையிறுதிய போட்டியில் தெரிவு செய்யப்படும் கழகங்கள் 7 வீரர் போட்டி, 11 வீரர் போட்டியின் 3ம் திகதி இடம் பெறும் சாம்பியன் மோதல்களில் சந்திக்கும்.

[கொ நி]

## "ஈழநாடு" செய்தியின் எதிரொலி

(மட்டக்களப்பு)

1978-ம் ஆண்டு நவம்பர் மாத நடுப்பகுதியில் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளியான செய்தியொன்று தபால்மா அதிபரின் கவனத்தைப் பெற்றுள்ளது.

மட்டக்களப்புத் தொகுதியிலுள்ள பின்தங்கிய பிரதேசமான கன்னன்குடா உபதபால் நிலையத்தில் நிலவும் குறைபாடுகள்குறித்துஅச்செய்தியில் விபரமாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

மேற்படிசெய்திதொடர்பாக தபால் இலாகா நிருப்பிட்ட தபாலகத்தில் நிலவும் குறைபாடுகளையிட்டு விரிவான அறிக்கையொன்றை கோரியுள்ளது என்று நமது நிருபரிடம் பிரஸ்தாப உபதபால் அதிபர் திரு. க. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

## ஈழத்து...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

ஜீவா தமிழ்நாட்டுக்கு அண்மையில் வந்து பல கூட்டங்களிலும் இலங்கை எழுத்தாளர்கள், இலக்கியங்கள், இந்தியாவுக்கான இறக்குமதித் தடைகள் பற்றி விரிவாகக் கூறினர். இதன் பிறகுதான் உண்மை நிலை எமக்குத் தெரிந்தது திரு ஜீவா துணிச்சலாக அங்கு தெரிவித்த பல கருத்துக்கள் பெரும் விழிப்பையும் தாக்கத்தையும் ஏற்படுத்தியது

"இந்தநாட்டு பத்திரிகைகள், சஞ்சிகைகள் அங்கு வருவதற்கு இலங்கை — இந்திய எழுத்தாளர்கள் கூட்டாக தீவிர முயற்சி எடுக்கவேண்டும். தமிழக அரசுடன் தொடர்பு கொண்டு, தேவைப்பட்டால் மத்திய அரசுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் இது ஒரு தலையாய பிரச்னை இலங்கை எழுத்தாளர்களின் வேதனையைப்போக்க முடிந்தளவு நாம் முயற்சி எடுப்போம். தமிழகம் சென்றதும் இதுபற்றி விரிவாக நான் செயல்படுவேன்" என்று உறுதியாகக் கூறினர் இளைஞர் எஸ். இராசகோபால்.

-- கே. ஜி. எம்.

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெய்சங்கர்
**எடுப்பார்கைபிள்ளை**

## மீனவருக்கு கடன் வசதி

[புலோலி]

14 வருடத்தில் திருப்பிச் செலுத்தக்கூடியதும் உச்சமாக 35,000 ரூபாவை கடனுகப் பெறக்கூடியதுமான மீனவர் கடனை, முதலீட்டுக் கணக்கு ஆரம்பிக்காத மீனவர்களும் பெற்றுக்கொள்ளலாம்.

பருத்தித்துறை எம். பி. திரு கே. துரைரத்தினம் வங்கிகளின் ஆலோசனைச் சபையைக் கேட்டுக்கொண்டதையடுத்தே முதலீட்டுக்கணக்கை ஆரம்பிக்காத மீனவர்களும் இக்கடனைப் பெறுவதற்கு வாய்ப்பேற்பட்டுள்ளது.

இக்கடன்கோரி விண்ணப்பிக்க விரும்பும் வடமராட்சி மீனவர்கள் பருத்தித்துறை, தாளையடி மீன்பிடி பரிசோதகர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அவசரமாகக் கேட்கப்பட்டுள்ளனர். இக்கடனை உரிய காலத்தில் பெறுவதில் இல்லது விண்ணப்பிப்பதில் ஏதாவது சிரமங்கள் ஏற்பட்டால் உடனடியாகத் தம்முடன் தொடர்புகொள்ளுமாறும் பருத்தித்துறை எம். பீ. துரைரத்தினம் தெரிவித்துள்ளார்.

# கலாச்சாரப் புரட்சியில் சுவீகரித்த சொத்து: மீண்டும் மக்களிடம் ஒப்படைக்க முடிவு

## சீன அரசு நடவடிக்கை

பீகிங், 6
1960ம் ஆண்டுக்கு ...னர் ... டு ... கலாச் ... புரட்சியி ... போது அர ... சுவீ ... வங் ... துக்கள், ... நிறுவனங்கள், தங்க... வீடுகள் ஆகிய வற்றை மீண்டும் உரியவர்களி டம் கொடுக்கச் சீனஅரசு தீர் மானித்துள்ளது.

கலாச்சாரப் புரட்சியின் போது கைப்பற்றப்பட்டவை சட்டவிரோதமாகவே சுவீகரிக் கப்பட்டுள்ளதாகக் கருதியே இவை திரும்பவும் வழங்கப் படுகிறது.

200 பேர் கொண்ட முத லாளிகளின் விசேட கூட்டம் ஒன்றையடுத்தே அரசு மேற் கண்ட முடிவை எடுத்துள் ளது.

கலாச்சாரப் புரட்சியின் போது சம்பளக் குறைப் பைப் பெற்றவர்களுக்கு மீண் டும் பாக்கிப்பணத்துடன் அதிக சம்பள உயர்வு வழங் கவும், வேறு வகையில் பாதிக் கப்பட்டவர்களுக்கு மீண்டும் வேலைவாய்ப்பு, நிவாரணம் அளிக்கவும் தீர்மானிக்கப்பட் டுள்ளது. (இ)

## பாண்டிச்சே...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தலைமைக்காரியாலயத்தைத் தாக்கியது என்றும் இதனால் 15 பொலிசார் காயமடைந்த வர் என்றும் அறிவிக்கப்பட் டது.

இதுவரை பொலிசார் 127 பேரைக் கைது செய்துள்ளனர்.

ஊரடங்குச்சட்டத்தை மீறி வீதியில் நடமாடியவர்கள்மீது பொலிசார் சுட்டதில் மாண வர் ஒருவர் பலியானர் என் றும் 15 பேர் படுகாயமடைந் தனர் என்றும் தெரிவிக்கப் பட்டது.

இன்று காலை 10 மணிக்கு குடியரசு அணிவகுப்பை அடு த்து இடம்பெற்ற கலவரத் தைத் தொடர்ந்து அமுல்செய் யப்பட்ட ஊரடங்குச்சட்டம் ஞாயிறுவரை அமுலில் இருக் கும் என்றும் நாளை பொதுமக் கள் தமக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காக காலை 7 மணிமுதல் 9-30 மணிவரை ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்படுமென்றும் அறி விக்கப்பட்டது.

### கண்ட இடத்தில் சுட உத்தரவு

தீ வைப்பு, நாசவேலைகளில் ஈடுபடுவோரைக் கண்டஇடத் திலேயே சுட்டுக்கொலைசெய்யு மாறும் அரசு ஆயுதப்படைக ளுக்கு உத்தரவிட்டுள்ளது.

## சட்டவிரோ...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சசிரகுமார ஜெயசேகர, சார் ஜன்ட் திரு. பாலசுப்பிரமணி யம், கான்ஸ்டபிள்கள் திரு. நந்தசேன, திரு எட்மன் ஆகி யோர் கைதுசெய்தனர்.

நேற்றுயாழ் போக்குவரத்து பொலிஸ் சார்ஜன்ட் பாலசுப் பிரமணியம் 26 பேரையும் யாழ் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது யாழ். நீதிபதி திரு.விமல் திசநாயகா 26 பேருக்கும் தலா 50 ரூபா அப ராதம் விதித்துத் தீர்ப்பளித் பளித்தார். [இ]

## யாருடையது?

மணிக்கூட்டுகோபுர வீதியில் மூன்று சிறிய திறப்புகள் இ. சிருபாகரசூரியன் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது- உரியவர் பெற் றுக்கொள்ளலாம்.

## கனடா...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கென ஒரு இறைமையை கியூ பெக் ஏற்படுத்திக் கொள்ள லாமென்றும், இதற்கு முன் னர் ஒரு பொதுஜன வாக் கெடுப்பை நடத்தலாம் என் றும் ஆணைக்குழு தனது அறிக் கையில் தெரிவித்துள்ளது.

### பிரிவினைக் கோரிக்கை

கியூபெக் மக்கள் இரண் டாம் தரப் பிரஜைகளாகக் கணிக்கப்படுகின்றனர் என்றும் சமஷ்டி அரசு உத்தியோகங் கள் பெறுவதிலும் கூட பார பட்சம் காட்டப்படுவதாகவும் கியூபெக் மக்கள் நீண்ட கால மாகக் குற்றம் சுமத்தி வந்தது டன் கியூபெக்கை பிரித்து ஒரு தனிராஜ்யமாக அமைக்கவேண் டும் என்றும் கனடா சமஷ்டி அரசை நீண்டகாலமாக வற் புறுத்தி வந்துள்ளனர்.

### டிகோலும் வற்புறுத்தினர்

ஒரு தடவை கனடாவுக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்த முன்னாள் பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டிகோல் கியூபெக் மக்களின் சுதந்திர தாகத்தைப் புரிந்து பிரெஞ்சு மொழி பேசும் கியூ பெக் மக்களுக்கு சுதந்திரம் வழங்கவேண்டுமென்று கனடா வில் கருத்து வெளியிட்டதைத் தொடர்ந்து தமது சுற்று விஜ யத்தைச் சுருக்கிக்கொண்டு தாயகம் திரும்பியது இங்கு குறிப்பிடத்தக்கது.

## ரஷ்ய கோஷ்டி வெற்றி!

[விளையாட்டு நிருபர்]

ரஷ்ய உதைபந்தாட்டக் கோஷ்டி யாழ் தெரிவுக்கோஷ் டியை 4—2 கோல்களால் தோற்கடித்தது.

யாழ். துரையப்பா விளை யாட்டரங்கில் நேற்றுமாலை நடைபெற்ற யாழ்-ரஷ்யஉதை பந்தாட்டப் போட்டியின் போது யாழ். எம் பி திரு வெ யோகேஸ்வரன், மாவட்ட நீதிபதி திரு. ஜி. ஜே. ஆசீர் வாதம் ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக்கலந்து கொண்டனர்.

ஆட்ட இடைவேளைக்குமுன் னர் ரஷ்யக் கோஷ்டி முதல் மூன்று கோல்களையும் அடித் தது. இடைவேளையின் பின் னரே யாழ், வீரர்கள் திறமை யாக விளையாடி 2 கோல்களை யும் போட்டனர். ரஷ்யக் கோஷ்டி இடைவேளையின் பின் 4வது கோலை அடித்தது. [இ]

## வானில் வந்த...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எம். பி யிடம் புகார்செய்யப் பட்டதாம்.

இதையடுத்து யாழ் எம். பி ஸ்தலத்திற்குச் சென்ற துடன், உதவிப் பொலிஸ் அதிபருடன் தொடர்புகொண் டார் அடுத்து யாழ். பொலிஸ் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு.சேனாதி ராசா தலைமையிலான பொலிஸ்குழு ஸ்தலத்திற்கு விரைந்து சென்று, கச்சேரி யில் வைத்துத் தாக்குதலுக் குள்ளான பிரயாணிகளினதும் வான் சாரதியினதும் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்தது.

சாரதி, யாழ். ஆஸ்பத்திரி யில் சிகிச்சை பெற்றார்.

இச்சம்பவம் குறித்து தாம் ஜனாதிபதியினதும், பிரதம ரினதும் கவனத்திற்குக் கொண்டுவரவிருப்பதாக திரு. யோகேஸ்வரன் தெரிவித்தார் [இ]

## கட்டுநாயக்கா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஊைப்பகுதி பொறுப்பதிகாரி திரு. ஈ. அப்பையா, கான்ஸ் டபிள் வை. இராமலிங்கம் ஆகியோர் அந்நபரை தந்திர மாக மடக்கிப்பிடித்து கைது செய்தனர்.

சிவகுரு விஸ்வநாதனிடமி ருந்து 3210 ரூபாவையும், சுப் பர் சின்னத்தம்பியிடமிருந்து 3800ரூபாவையும் கடந்த மாதம் 15ந் தேதி சந்தேகநபர் பொன்னம்பலம் பெற்றுக் கொண்டார் என்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாதம் 19ந் தேதி இரவு 10-30 மணிக்கு கட்டுநாயகா விலிருந்துசவூதிஅரேபியாவுக்கு புறப்பட்டவிமானத்தில் செல் வதற்கு சந்தேகநபரும் தங்க ளுடன் கட்டுநாயகாவந்து ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தத கவும், அன்றுமாலை 5மணிக்கு அவர் வெளியில்சென்றுவிட்டு விமானம் சென்றபின்னரும் திரும்பிவராததினால் ஒருநாள் ஹோட்டலில் தங்கி அவரின் வரவை எதிர்பார்த்து ஏமாற் றமடைந்தபின் தாங்கள் திரும்பி வந்ததாகவும் புகாரில் இளைஞர்கள் தெரிவித்துள்ள னர்.

பொலிஸார் தொடர்ந்து விசாரணைசெய்து வருகின்ற னர். [க-இ]

### 28-1-79

### வாரமலரில்...

சிறுகதை
பார்வைகள் கோண லாகும்போது...!
- 'தமிழ்ப்பிரியா'

இலக்கியத்துறையில் இளையதலைமுறை
(தொடர் அம்சம்)
- காலைூர் எஸ் ஜெகநாதன்

ஐயந்தி
- அ. செ. மு.

மலட்டு மாட்டில் கறந்த பால்
(சித்திரம்)
- எஸ். குமார ஜோதிபால

சர்வதேச நாணய நிதி
(கட்டுரை)
- ந ஸ்கந்தரராஜா

கலைமஞ்சரி

மாணவர் எண்ணம்

மற்றும் வழமையான அம்சங்கள்

## யாழ். நகரில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஜி. ஜி.யின் உருவச்சிலை

யாழ்ப்பாணம் நீதிமன்றத் திற்குமுன்னால் அமரர் ஜி ஜி. பொன்னம்பலத்தின் உருவச் சிலையை அன்று பிற்பகல் 4 மணிக்கு தமிழர் விடுதலைக்கூட டணித்தலைவர் திரு. எம். சிவ சிதம்பரம் திறந்துவைப்பார். இவ்விழாவில் தமிழ் இளைஞர் பேரவையினரும் மகளிர் பேர வையினரும் கலந்துகொள் வார்கள். [+]

## காங்கிரஸ் தரப்படுத்தல் பற்றி ஆராயும்

[யாழ்ப்பாணம்]

பல்கலைக்கழக தரப்படுத்தல் பற்றி என்ன நடவடிக்கை எடுப்பதென்பதுபற்றி ஆராய தமிழ்க்காங்கிரஸ் செயற்குழு பெப்ரவரி 3ந் தேதி யாழ்ப் பாணத்தில் கூடுகிறது.

## யாழ். நவீன மார்க்கட்

# வர்த்தகர் குறைபாடு இன்னும் தீரவில்லையாம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.நவீனசந்தைவர்த்தகர் களுக்கு உள்ள சில குறைபாடு கள் நிவர்த்திசெய்து கொடுக் கப்படுமென ஆறுமாதத்திற்கு முன் உறுதியளிக்கப்பட்டது. ஆனால் இதுவரை செய்து கொடுக்கப்படவில்லை.

யாழ்ப்பாண நவீனசந்தை வர்த்தகஉரிமையாளர் சங்கத் தலைவர் திரு. த. சங்கரப் பிள்ளை வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் மேற் கண்டவாறு தெரிவித்துள் ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-"உள் ளூராட்சி அமைச்சின்செயலா ளர் திரு. ஆர். பாஸ்கரலிங் கம் தலைமையில் கடந்தவரு டம் ஜூன் 21ந் தேதி நடந்த மாநாட்டில் பல முடிவுகள் எடுக்கப்பட்டது. இம் மகா நாட்டில் யாழ். விசேடஆணை யாளர் திரு. கே. சிவஞானம், அகில இலங்கை வணிகர் சங் கச் செயலாளர் திரு.பி. முத் துக்குமாருவும் கலந்துகொண் டனர்.

இம்மகாநாட்டில் நவீன மார்க்கட் ஒப்பந்தத்தை 7 வரு டத்திற்கு ஒருமுறை புதுப்பித் தல், மாதவாடகையை 50 வீதம் அதிகரித்தல், இரு மல சலகூடங்கள் கடைகளாக மாற்றப்பட்டுள்ளதால் புதி தாக இரு மலசலகூடங்கள் கட் டுதல் ஆகிய கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேல்மாடிசெல்லும் படிக்கட்டு வாசலில் கேட் போடுவதாக வும், குழாய்நீர் வழங்குவதா கவும், கடைகளை தந்தை, மகன், கணவன், மனைவிக் கும் மாற்றும்போது பணமில் லாமல் மாற்றுவதென்றும் முடி வாகியது.

ஒப்பந்தம்செய்தல், வாடகை அதிகரிப்பு இரண்டையும்தவிர மற்றும் குறைபாடுகள் தீர்க் கப்படவில்லை. (க)


## நண்டு, இருல், கணவாய்
## தேவை

1. பெரிய வெள்ளை நண்டு
2. பெரிய நண்டு (கறுப்பு)
3. கணவாய்
4. இருல்

முதலியன கொள்வனவு செய்யப்படும்.
தொடர்பு கொள்ளவும்.

சீ நோர்,
காரைநகர்.

1447


உ
சிவமயம்

## அந்தியேட்டி அழைப்பு



சின்னம்மா முருகுப்பிள்ளையின் அந்தியேஷ்டி கீரிமலையில் தைமாதம் 14-ந் திகதி [27-1-79] சனிக்கிழமை காலை 9-30 மணியளவிலும், பகல் 12-00 மணிவரையில் அன்னதானமும் மறுநாள் [28-1-79] ஞாயிற்றுக்கிழமையன்று நல்லூர் ரெம்பிள் ரோட் 174எண்ணுள்ள இல்லத்தில் காலை 10-30 மணியளவில் வீட்டுக்கிருத்தியமும், பகல் 12-00 மணிக்கு அன்னதானமும் நடைபெற இருப்பதால் மேற்கண்ட இரு தினங்களிலும் தாங்கள் யாவருமாக வந்திருந்து சிறப்பித்து வைக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்

இங்ஙனம்
மக்கள், மருமக்கள்.

1462

## காணவில்லை



புங்குடுதீவு இறுப்பிட்டி துறைமுகத்தைச்சேர்ந்த ஆறுமுகம் கோபாலபிள்ளையை 20-1-79 முதல் காணவில்லை. இவர்பற்றிய தகவல் தெரிவிப்பவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும்.

ஆ. பொன்னம்பலம்,
6-ம் வட்டாரம், புங்குடுதீவு

1463

## அறிவித்தல்

இலங்கை அவைக்காற்று கலைக்கழகத்தின் சார்பில் சமர் சஞ்சிகை நிதிக்காக இன்று [27-1-79] யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருந்த 'கண்ணாடி வார்ப்புகள்' நாடகம் தவிர்க்கமுடியாத காரணத்தினால்

**18-2-79க்குப் பின்போடப்பட்டுள்ளது**

என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு தைமாதம் 27-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice
The Eelanaadu Post Bex No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.